2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. அதைப் பின்னர் எடுத்துக் கொள்ளலாம். உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நேற்றையதினம் நீங்கள் எழுப்பிய ஒரு பிரச்சினை பற்றி, இப்பொழுது ஒரு கிளாரிபிகேசன் கேட்க வேண்டும் என்றீர்கள். அதைக் கேட்கலாம்.

(ஆ) 27-4-1994-ஆம் நாளன்று ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அளிக்கப்பட்ட பதிலையொட்டி விளக்கம்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நேரம் இல்லாத நேரத்தில் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்று கொண்டு வந்து-வேலூர் சிறைச்சாலை, அதேபோல திருவண்ணாமலை கிளைச் சிறைச்சாலையினுடைய கைதிகள் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது தப்பி ஓடியது குறித்து நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். அப்பொழுது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இம்மாமன்றத்தில் சொல்கிறபொழுது, அந்தக் கைதிகள் தப்பி ஓடியது தொடர்பாக அப்போது காவலில் இருந்த காவலர்கள் ஐவர் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். காவலர்கள் என்று சொல்கிறபொழுது சிறையிலிருந்து வெளியே, மருத்துவமனைக்குக் கைதிகளைக் கொண்டு வருகிறபொழுது காவல் துறையைச் சார்ந்தவர்கள்தான் அங்கே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சிறைக்கு உள்ளே இருக்கும்போதுதான் சிறையிலே இருக்கக்கூடிய வார்டர்கள், சிறைத் துறை அதிகாரிகள் அங்கே காவலில் இருக்கிறார்கள். நேற்று குறிப்பிடுகிறபொழுது காவல் துறையைச் சார்ந்த காவலர்கள்தான் அங்கே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நான் உணர்ந்தேன். ஆனால் இன்று சில பத்திரிகைகளைப் பார்க்கிறபொழுது அதிலே சிறைச்சாலைத் துறையைச் சார்ந்த காவலர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகச்